Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 164

சனிக்கிழமை
09 மே 2026

சித்திரை 26 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் –12
விலை – ரூபா 50



மோசடியாக இழப்பீடு

## கோத்தாபயவுக்கு அழைப்புக்கட்டளை

உத்தரவிட்டது உயர்நீதிமன்றம்

கொழும்பு, மே 9
2022ஆம் ஆண்டு அரகலய போராட்டம் வன்முறையாக மாறியதில் தமது சொத்துக்கள் சேதப்படுத்தப்பட்டன என்றுகூறி முன்னாள் அமைச்சர்கள் இழப்பீடு பெற்ற விவகாரத்தில், அப்போதைய ஜனாதிபதி கோத்தாபயவுக்கு அழைப்புக் »11

## மர்மக் காய்ச்சல் பரவல் 4 பாடசாலைகள் மூடல்!

விரிவு பக்கம்:- 05

திஸ்ஸ விகாரையால் ஆக்கிரமிக்கப்பட்ட

# வீதியை விடுவிப்பதற்கு தடை விதிக்க முடியாது

நீதிமன்றம் அதிரடி உத்தரவு

பொலிஸாரின் முயற்சி பிசுபிசுப்பு

வழக்கு திங்களன்று விசாரணை

யாழ்ப்பாணம், மே 8
தையிட்டி திஸ்ஸ விகாரைக்காக ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பவானி வீதியை விடுவிப்பதற்கு பிரதேசசபை நடவடிக்கை எடுத்துவரும் நிலையில், அந்த முயற்சிகளுக்குத் தடை விதிக்குமாறு பொலிஸாரால் விடுக்கப்பட்ட கோரிக்கையை ஏற்பதற்கு நீதிமன்றம் மறுப்புத் தெரிவித்துள்ளது. »11

தவிசாளரின் போக்குவரத்துக்காக

## ஐந்து மாதங்களில் ரூ.17 லட்சம் செலவு

வவுனியா, மே 9
வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேசசபைத் தவிசாளரின் போக்குவரத்துத் தேவைக்காக வாடகைக்குப் பெறப்பட்ட வாகனத்துக்கு கடந்த 5 மாதங்களில் 17 லட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளது.
வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேசசபைத் தவிசாளரின் »11

## வலி.வடக்கு காணிகளை உடனடியாக விடுவிக்குக

அந்தப் பகுதி மக்கள் போராட்டம்

யாழ்ப்பாணம், மே 9
வலிகாமம் வடக்குப் பகுதியில் படையினரின் பிடியிலுள்ள காணிகளை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று வலியுறுத்தி மக்கள் நேற்றும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
தமது போராட்டம் தொடர்பில் »11



செம்மணிப் புதைகுழியில்

## இரு என்புத்தொகுதிகள் நேற்றும் அடையாளம்!

மழையால் அகழ்வுப் பணிகள் பாதிப்பு

யாழ்ப்பாணம், மே 9
யாழ்ப்பாணம் செம்மணி மனிதப் புதைகுழிக்குள் இருந்து இரு என்புத் தொகுதிகள் நேற்று மீட்கப்பட்டுள்ளன.
செம்மணி மனிதப் புதைகுழி மீதான »11

விமானக் கொள்வனவு ஊழல்

## கபில சந்திரசேன சடலமாக மீட்பு!



கொழும்ப, மே 8
ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் முன்னாள் பிரதம நிறைவேற்று அதிகாரியான கபில சந்திரசேன, கொள்ளுப்பிடியில் உள்ள வீடொன்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
2013ஆம் ஆண்டு 2.3 பில்லியன் அமெரிக்க டொலர் »11

வாரத்தில் 3 நாள்கள்

## யாழ்தேவி ரயில்சேவையை விரிவாக்குவதற்குத் திட்டம்

யாழ்ப்பாணம், மே 9
தற்போது இடம்பெற்றுவரும் சேவைக்கு மேலதிகமாக வாரத்தில் மூன்று நாள்கள் யாழ்தேவி ரயில் சேவையை அதிகரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
இதன்படி, திங்கள், புதன் »11




## கபிலவின் மரணத்தில் சந்தேகங்கள்!

கொழும்ப, மே 8
சிறிலங்கன் எயார்லைன்ஸின் முன்னாள் தலைமை நிர்வாக அதிகாரி கபில சந்திரசேனவின் மரணம் சந்தேகத்திற்குரியது என கோட்டை நீதவானிடம் கொள்ளுப்பிட்டி பொலிஸார் தெரிவித்துள்ளனர். »11

## யாழ். பேருந்துத் தரிப்பிட மலசலகூடம் யாருக்கு?

மாநகரசபை இ.போ.ச. இழுபறி
நீதிமன்றத்தை நாட முடிவு

யாழ்ப்பாணம், மே 9
யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தில் அமைக்கப்பட்டுவரும் மலசலகூடத்தை அடிப்படையாக வைத்து, யாழ்ப்பாணம் மாநகரசபைக்கும், இ.போ.ச. திணைக்களத்துக்கும் இடையில் கருத்து மோதல் ஏற்பட்டுள்ள நிலையில், இந்த விடயத்தில் நீதிமன்றத்தை நாடுவதற் »11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 08.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4425 |
| ஆங்கில எழுத்து | L |
| வெற்றி இலக்கங்கள் | 26 49 60 67 |
| விசேட எழுத்து | L |

| ஹந்தஹனெ ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 08.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1492 |
| வெற்றி இலக்கினம் | மிதுனம் |
| வெற்றி இலக்கங்கள் | 27 33 42 59 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 08.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0451 |
| ஆங்கில எழுத்து | P |
| வெற்றி இலக்கங்கள் | 6 0 7 7 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 08.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2531 |
| ஆங்கில எழுத்து | Y |
| சுப்பர் இலக்கம் | 10 |
| வெற்றி இலக்கங்கள் | 01 12 13 16 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 08.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6183 |
| ஆங்கில எழுத்து | X |
| வெற்றி இலக்கங்கள் | 2 6 4 7 9 4 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 08.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2213 |
| ஆங்கில எழுத்து | E |
| வெற்றி இலக்கங்கள் | 07 63 64 79 |
| விசேட எழுத்து | E |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 08.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0299 |
| வெற்றி இலக்கினம் | தனுஷம் |
| வெற்றி இலக்கங்கள் | 05 47 67 |

# 5,000 டொலரானது தனிநபர் வருமானம்!

## பிரதி அமைச்சர் ருவன் பெருமிதம்

**கொழும்பு,மே 9**

**இலங்கையின் தனிநபர் வருமானம் முதன்முறையாக 5,000 அமெரிக்க டொலரைக் கடந்துள்ளதாகப் பிரதி அமைச்சர் பேராசிரியர் ருவன் ரணசிங்க தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும் போதே பிரதி அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

புதிய அரசாங்கம் பொறுப்பேற்று ஓராண்டிற்குள், நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 109 பில்லியன் டொலரை அண்மித்துள்ளது. வங்குரோத்து நிலையில் இருந்த நாட்டை மீட்டெடுத்து, தனிநபர் வருமானம் 5,000 டொலருக்கும் அதிகமாக உயர்த்தப்பட்டுள்ளது. நாட்டை அழித்து வங்குரோத்தடைய செய்தவர்களே இப்போது எமக்கு முன்னேற்ற அறிக்கை தொடர்பாக அறிவுரை கூறுகிறார்கள். அவர்களின் அரசியல் கட்சிகள் இன்று திக்குத் தெரியாமல் அழிந்து போயுள்ளன.

'டித்வா' புயல் பாதிப்புகளைச் சீர்செய்ய வெளிநாடுகளிடம் ஒரு ரூபாகூடக் கடனாகப் பெறாமல், திறைசேரி மூலமே இழப்பீடுகளை வழங்குவதற்கு அரசாங்கம் எடுத்துள்ள முடிவானது பொருளாதாரப் பலத்தைக் காட்டுகிறது - என்றார். (ச-இ)

| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 08.05.2026 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| வெற்றி வாரம் | 0891 |
| ஆங்கில எழுத்து | V |
| வெற்றி இலக்கம் | 9 5 8 7 8 2 |

| Super Ball DLB | |
|---|---|
| திகதி | 08.05.2026 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 3157 |
| ஆங்கில எழுத்து | A |
| வெற்றி இலக்கம் | 06 19 39 59 |

| சனிதா DLB | |
|---|---|
| திகதி | 08.05.2026 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | L |
| வெற்றி இலக்கம் | 08 38 53 72 |
| வெற்றி வாரம் | 5318 |

| SASIRI DLB | |
|---|---|
| திகதி | 08.05.2026 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| வெற்றி வாரம் | 0987 |
| வெற்றி இலக்கம் | 05 41 43 |

| லக்ன ராசி DLB | |
|---|---|
| திகதி | 08.05.2026 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| விருச்சிகம் | |
| வெற்றி இலக்கம் | 01 11 33 46 |
| சீட்டிழுப்பு வாரம் | 4869 |

| KAPRUKA DLB | |
|---|---|
| திகதி | 08.05.2026 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | H |
| சுப்பர் இலக்கம் | 25 |
| வெற்றி இலக்கம் | 10 15 25 50 |
| வெற்றி வாரம் | 2333 |

| அத கோடிபதி DLB | |
|---|---|
| திகதி | 08.05.2026 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | L |
| வெற்றி இலக்கம் | 11 14 22 26 |
| வெற்றி வாரம் | 2983 |

## சுரேஷ் சலேவின் ரிட் மனு ஜூன் 4– க்கு ஒத்திவைப்பு!

கொழும்பு,மே 9

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ள சுரேஷ் சலே, தனது அடிப்படை உரிமைகள் மீறப்படுவதாகவும், முறையற்ற விதத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் கோரி தாக்கல் செய்த ரிட் மனு மீதான விசாரணையை எதிர்வரும் ஜூன் மாதம் 4ஆம் திகதிக்கு நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

மனுதாரர் சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்சீவ ஜயவர்தன, 2019 உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் நடந்த சமயத்தில் சுரேஷ் சலே இந்தியாவில் தேசிய பாதுகாப்புக் கல்லூரியில் பாடநெறி ஒன்றில் கலந்துகொண்டிருந்தார். எனவே, தாக்குதலுடன் அவருக்குத் தொடர்பிருக்க வாய்ப்பில்லை. பிரித்தானியாவின் 'சனல் 4' ஊடகத்திற்கு அசாத் மௌலானா வழங்கிய கருத்துகளின் அடிப்படையிலேயே இந்த விசாரணைகள் நடக்கின்றன. இதற்கு எவ்வித சட்டபூர்வ சாட்சியப் பெறுமதியும் இல்லை. இலங்கை நீதிமன்றக் கட்டமைப்பை விமர்சித்த அசாத் மௌலானா மீது ஏன் இன்னும் நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தாக்கல் செய்யப்படவில்லை என தெரிவித்தார்.

சுரேஷ் சலே குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் 6ஆவது மாடியில் மனிதர்கள் தங்குவதற்குத் தகுதியற்ற சிறிய அறையில் அடைக்கப்பட்டுள்ளார். இதனால் அவர் கடும் மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளார் என்றும் நீதிமன்றில் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த பிரதி சொலிசிட்டர் ஜெனரல் சுஹார்ஷி ஹேரத், சி.ஐ.டி. கட்டடம் மிகவும் பழமையானது. அங்குள்ள அதிகாரிகளே குறைந்தபட்ச வசதிகளுடன்தான் பணியாற்றி வருகின்றனர்- என்றார். இருதரப்பு வாதங்களையும் கேட்ட மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர், தடுத்து வைக்கப்பட்டுள்ள எவராக இருந்தாலும் அவர் கௌரவமான முறையில் நடத்தப்பட வேண்டியது அவசியம் எனச் சுட்டிக்காட்டினார். அதைத் தொடர்ந்து, இந்த மனு மீதான மேலதிக விசாரணைகளை எதிர்வரும் ஜூன் மாதம் 4ஆம் திகதிக்கு நீதிமன்றம் ஒத்திவைத்தது. (ச-இ)

## சத்தாரதன தேரர் சி.ஐ.டி.யால் கைது



கொழும்பு, மே 9

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் பொலிஸ்மா அதிபர் ஆகியோருக்கு சமூக ஊடகங்கள் ஊடாக அச்சுறுத்தல் விடுத்த குற்றச்சாட்டில், ராஜாங்கனை சத்தாரதன தேரர் மத்திய குற்றப் புலனாய்வுப் பணியகத்தால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

விசாரணைகளின் அடிப்படையில், போதுமான ஆதாரங்கள் திரட்டப்பட்டதைத் தொடர்ந்து அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. கைதுசெய்யப்பட்டுள்ள தேரரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மத்திய குற்றப் புலனாய்வுப் பணியக அதிகாரிகள் முன்னெடுத்து வருகின்றனர். (ச-இ)

## போலி டொலர் தாளுடன் வெளிநாட்டவர்கள் கைது

காலி, மே 9

போலி அமெரிக்க டொலர் நாணயத்தாள்களுடன் தஜிகிஸ்தான் நாட்டைச் சேர்ந்த இருவர் காலிப் பகுதியில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் மோட்டார் சைக்கிள்களை வாடகைக்கு எடுப்பதற்காக, 400 அமெரிக்க டொலர் பெறுமதியான போலி நாணயத்தாள்களை வழங்கியுள்ளனர்.

இதுதொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டையடுத்து சுற்றுலா பொலிஸ் நிலைய அதிகாரிகள் சந்தேகநபர்களைக் கைதுசெய்து சோதனையிட்டபோது அவர்களிடமிருந்து மேலும் 5,200 போலி அமெரிக்க டொலர் நாணயத்தாள்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். (ச-இ)



## திறைசேரி நிதி விவகாரம்; 21 பேரிடம் வாக்குமூலம்

கொழும்பு, மே 9

திறைசேரியால் அவுஸ்ரேலிய நிறுவனத்துக்கு செலுத்தப்பட்ட 2.5 மில்லியன் டொலர் மூன்றாம் தரப்பால் மோசடி செய்யப்பட்ட விவகாரம் தொடர்பில் 21 பேரிடம் வாக்குமூலங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன என்று பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

திறைசேரியால் செலுத்தப்பட்ட 2.5 மில்லியன் டொலர் மோசடி செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக பூரண விசாரணைகள் இடம்பெறுகின்றன. மூன்றாம் தரப்பினருக்குப் பணத்தை மாற்றியதற்கு யாராவது பொறுப்புக்கூற வேண்டியவர்கள் இருந்தால், அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள். இதில் மாற்றுக்கருத்து ஏதுமில்லை.

இலங்கையில் இடம்பெறும் இணையக் குற்றங்கள் தொடர்பாக கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. சைபர் குற்றங்களைத் தடுப்பதற்கு புதிய சட்டமியற்றல் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது - என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




# ஒவ்வொரு மாகாணங்களிலும் இணையக் குற்றத் தடுப்புப்பிரிவு

## அமைச்சர் ஆனந்த தெரிவிப்பு

**கொழும்பு, மே 9**

**வடக்கு மாகாணம் உட்பட ஒவ்வொரு மாகாணத்திலும் இணையக் குற்ற வழக்குகளை விசாரிப்பதற்கு பிரத்தியேக இணையக் குற்றத் தடுப்புப் பிரிவுகள் நிறுவப்பட்டுள்ளன என்று பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அமர்வின்போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது- செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான கண்காணிப்பு அமைப்புகள், பொது மக்கள் விழிப்புணர்வுத் திட்டங்கள் மற்றும் கடினமான அமுலாக்க நடவடிக்கைகள் மூலம் பெண்களுக்கான டிஜிற்றல் பாதுகாப்பை நடைமுறைப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. பெண்களுக்கு எதிராக இடம்பெறும் இணையக் குற்ற வழக்குகளில், தீர்க்கப்பட்ட மற்றும் விசாரணைக்காக அல்லது வழக்குத் தொடருதலுக்காக நிலுவையில் உள்ள இணையக் குற்ற வழக்குகள் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது- என்றார். (ச-இ)

# இணையம் ஊடாக நிதி மோசடி; வெளிநாட்டுக் குழுவினர் கைது

கொழும்பு, மே 9

வெலிசர இடைத்தங்கல் முகாமிலிருந்து தப்பியோடி, பொரலஸ்கமுவ பகுதியில் தங்கியிருந்து இணையம் ஊடாக நிதி மோசடிகளில் ஈடுபட்டுவந்த 30 வெளிநாட்டவர்கள் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் 21 சீனர்கள் மற்றும் 9 வியட்நாமியர்கள் அடங்குகின்றனர். இவர்களிடம் விசா அல்லது கடவுச்சீட்டு உள்ளிட்ட எந்தவொரு சட்டபூர்வ ஆவணங்களும் இருக்கவில்லை எனப் பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர். பொரலஸ்கமுவ பகுதியில் உள்ள இருமாடிக் கட்டடத்தின் மேல் தளத்தை மாதந்தோறும் 15 இலட்சம் ரூபா வாடகைக்கு எடுத்து, இவர்கள் இந்த மோசடியை முன்னெடுத்து வந்துள்ளமை ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. சந்தேகநபர்களிடமிருந்து மோசடிக்குப் பயன்படுத்தப்பட்ட 10 மடிக்கணினிகள், 29 அப்பிள் ரக அலைபேசிகள், இணைய வசதிகளைப் பெறுவதற்கான விசேட உபகரணங்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. கல்கிஸ்ஸை பிராந்திய குற்றப் புலனாய்வுப் பணியகம் இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளது. (ச-இ)



# சிங்கக்குட்டிகளுக்கு மக்கள் பெயரிடலாம்

கொழும்பு, மே 9

தெஹிவளை மிருகக்காட்சிசாலையில் வளர்ந்து வரும் இரண்டு சிங்கக் குட்டிகளுக்குப் பொருத்தமான பெயர்களைப் பரிந்துரைக்கும் வாய்ப்புப் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்தச் சிங்கக் குட்டிகள் கடந்த 2025 டிசம்பர் 24ஆம் திகதி பிறந்துள்ளன. தற்போது இந்தக் குட்டிகளுக்கு ஏழரை மாதங்கள் ஆகின்றன. இவற்றில் ஒன்று ஆண் குட்டி, மற்றையது பெண் குட்டியாகும். மிருகக்காட்சிசாலைக்கு வருகை தரும் பொதுமக்களுக்கு இந்தப் பெயர்களைப் பரிந்துரைக்க வாய்ப்பு வழங்கப்படும். இதற்காக மிருகக்காட்சிசாலை வளாகத்தில் விசேட பெட்டி ஒன்று வைக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் தாங்கள் விரும்பும் பெயர்களை அதில் போடலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# 625 பேர் கைது



கொழும்பு, மே 9

நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போது, 625 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. நேரடியாகக் குற்றங்களுடன் தொடர்புடைய 15 பேரும், பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 255 பேரும், திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 155 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். மது போதையில் வாகனம் செலுத்திய 71 பேரும், கவனக்குறைவாக வாகனம் செலுத்திய 52 பேரும், பிற போக்குவரத்துக் குற்றங்களுக்காக 4,252 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (எ-இ)

# கிரீஸ் பிணைமுறி மோசடி; கப்ரால் மீது மீள வழக்கு!

கொழும்பு, மே 9

2012ஆம் ஆண்டு கிரீஸ் நாட்டின் பொருளாதார நெருக்கடியை அறிந்திருந்தும், அந்நாட்டின் பிணைமுறிப் பத்திரங்களைக் கொள்வனவு செய்து இலங்கைக்கு 184 கோடி ரூபா நஷ்டத்தை ஏற்படுத்திய குற்றச்சாட்டில் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலுக்கு எதிராக மீண்டும் சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

100 மில்லியன் ரூபா பணத்தை வைப்புச் செய்யவேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில், கப்ராலுக்கு எதிரான முன்னைய வழக்கை மீளப் பெறுவதற்கு இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு இணங்கியிருந்தது. இதற்காக வழங்கப்பட்ட மூன்று மாத கால அவகாசத்திற்குள் குறித்த பணத்தை வைப்புச் செய்ய அவர் தவறியுள்ளார். நிபந்தனையை நிறைவேற்றத் தவறியதன் காரணமாக, ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் 67 (5) பிரிவின் கீழ் தற்போது மீண்டும் கொழும்பு மேல் நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கூட்டமும் தண்டமும்

**கூட்டத்துக்கு ஆக்களைச் சேர்க்கிறதுக்கு ஒவ்வொரு கட்சியும் ஒவ்வொரு 'றிக்ஸ்' வைச்சிருக்கும். இடதுசாரியள் எப்பவும் தங்கட கூட்டங்களுக்கு ஆக்களைக் கட்டாயப்படுத்தி- பலவந்தமாக்- கூப்பிடமாட்டினம். 'எல்லாரும் வந்தால் தான் நல்லது' எண்டு ஆக்களுக்கு நோகாத மாதிரிக் கூப்பிடுறதுதான் அவையின்ர பாணி. திசைகாட்டியும் இடது சாரியளைக் கொண்ட கட்சி எண்டதால அவையும் அப்பிடி நோகாமல் கூப்பிடும் எண்டுதானே எல்லாரும் எதிர்பார்ப்பினம். ஆனால் அந்தக் கட்சியும் ஒரு சர்வாதிகாரத்தனமா, அதிகாரத்தைக் காட்டி வெருட்டித்தான் கூட்டங்களுக்கு ஆக்களைக் கூட்டிக்கொண்டு வருகுதாம்.**

**இந்தமுறை திசைகாட்டியின்ர மேதினக் கூட்டப் பேரணி யாழ்ப்பாணம் ரவுணுக்க இருக்கிற புது பஸ்ஸ்ராண்டுக்குள்ள நிறைய ஆக்களோட நடந்தது எண்டு பட்சி நேற்றுச் சொன்னதெல்லோ. அந்தக் கூட்டத்துக்குத்தான் ஆக்களை வெருட்டிக்கொண்டு போயிருக்கினம். வடமராட்சியில இருக்கிற மீனவர் சங்கமொண்டு, தங்கட அங்கத்தவர் எல்லாரும் மே முதலாம் திகதி அவையின்ர பிரச்சினையளை அமைச்சரிட்டச் சொல்லிறதுக்குக் கட்டாயம் வரோணும் எண்டு அறிவிச்சிருக்கு. இப்பிடி அமைச்சரைச் சந்திக்கலாம், அவரிட்ட முறையிடலாம் எண்டு ஆசையூட்டிப் பேய்க்காட்டிப் போட்டுத் தங்களை மேதினக் கூட்டத்துக்குத்தான் கொண்டுபோகப் போயினம் எண்டது அந்த மீனவர்மாருக்கு விளங்கிட்டுது. அதால அந்தச் சங்கத்தைச் சேர்ந்த 69 பேர் மேதினக் கூட்டத்துக்குப் போகாமல் நிண்டிட்டினம். தங்கட சங்கத்தில இருந்து நூறுபேருக்கும் மேல கூட்டிக் கொண்டு வருவம் எண்டு கட்சியின்ர மேலிடத்துக்கு சத்தியம் பண்ணிப்போட்டு வந்த சங்கத்தின்ர நிர்வாகத்துக்கு, இப்பிடி 69 பேரும் சொல்லிவைச்சமாதிரி நிண்டதும், கொஞ்சப்பேரோட மேதினத்துக்குப் போனதும் செருப்படியாப் போட்டுது.**

**அந்தக் கோபத்தில திசைகாட்டியின்ர மேதினக் கூட்டத்துக்கு வராத 69 பேரும் ஆளுக்கு மூவாயிரம் ரூபா தண்டப்பணம் கட்டிப்போட்டுத்தான் கடற்றொழிக்குக்குப் போகலாம் எண்டும், அதுவரை அவை தொழிலுக்குப் போகேலாது எண்டும் எழுதி நோட்டீஸ் போர்ட்டில போட்டிருக்கினம். ஆனால் அந்த இடத்து மீனவர்மார் உள்ளதிலையே கஷ்டப்பட்ட ஆக்கள். அவை இப்பிடி மூவாயிரம் ரூபா பைன் கட்டிப்போட்டுத் தொழிலுக்குப் போறதெண்டால் அது எவ்வளவு பெரிய கஷ்டம். அதோட 'எங்கட சங்க நிகழ்வோ, இல்லாட்டி மீனவரின்ர போராட்டமெண்டாலோ நாங்கள் போயிருப்பம். இது ஒரு கட்சியின்ர மேதினம். அதுக்கு ஏன் நாங்கள் போகோணும்? கட்சியின்ர மேதினக் கூட்டத்துக்குப் போகாததுக்கு எப்படி எங்கட சங்கம் எங்களைத் தொழிலுக்குப் போக வேண்டாம் எண்டு மறிச்சு பைன் போடும்?' எண்டு அந்தச் சங்கத்து மீனவர்மார் கேக்கினம். அவையின்ர கேள்வியிலையும் நியாயம் இருக்கெல்லோ. ஒருக்கா கடற்றொழில் அமைச்சர் இந்த விசயத்தில தலைப்போட்டு அந்த மீனவர்மாருக்கு நீதி பெற்றுக்குடுக்கிறதோட, இப்பிடிக் கட்சியின்ர பேரைச் சொல்லி ஆக்களை பலவந்தமாக் கூட்டிக்கொண்டு போற விளையாட்டுக்கும் முற்றுப்புள்ளி வைப்பாரோ?**

padsi@uthayan.com - பட்சி

09.05.2026 சனிக்கிழமை

# தருமபுரத்தில் மாடுகள் திருட்டு மக்கள் வாழ்வாதாரம் பாதிப்பு




கிளிநொச்சி,மே 9

**கிளிநொச்சி மாவட்டத்தின் தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் அண்மைக்காலமாக இரவுவேளைகளில் கால்நடைகள் திருட்டு அதிகரித்து வருகின்றது என்று கால்நடை உரிமையாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.**

தருமபுரம் பகுதியில் கடந்த ஒரு மாதத்துக்குள் மட்டும் 10க்கும் மேற்பட்டபசுமாடுகள்திருடப்பட்டுள்ளன. வாழ்வாதாரத்துக்காக வளர்க்கப்பட்டு வந்த பசு மாடு ஒன்று, கன்று ஈன்று மூன்று மாதங்களே ஆன நிலையில் மேய்ச்சலுக்காகக் கட்டி விடப்பட்டிருந்தபோது களவாடப்பட்டுள்ளது. நாளுக்கு மூன்று லீற்றர் பால் கறந்து, அதனை விற்பனை செய்வதன் மூலமே வாழ்வாதாரத்தை மேற்கொண்டு வருகின்றோம். பகல் வேளைகளில் மேய்ச்சலுக்கு விடப்படும் மாடுகளும், இரவு வேளைகளில் கொட்டில்களில் கட்டப்படும் மாடுகளும் இலக்கு வைக்கப்படுகின்றன. தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் இந்தத் திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாக தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. கால்நடைகளைத் திருடிச் சென்று இறைச்சிக்காகப் பயன்படுத்தும் கும்பல்களை விரைவில் கைதுசெய்ய பொலிஸார் ரோந்து நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தவேண்டும் என்றும் பாதிக்கப்பட்ட கால்நடை உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர். (ச-113)

## பவள விழாவையொட்டி கிரிக்கெட் சமர்



மன்னார்,மே 9

மன்னார் மாவட்ட அடம்பன் மத்திய மகா வித்தியாலயத்தின் பவள விழாவைச் சிறப்பிக்கும் வகையில், பழைய மாணவர்களுக்கிடையிலான கிரிக்கெட் தொடர் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக அடம்பன் பண்ணை ஸ்தாபகர் நாகேஸ் உருத்திரமூர்த்தி, சிறப்பு விருந்தினர்களாக மயில்வாகனம் சூரியபுத்திரன், 'லக்மி கரங்கள்' உப பணிப்பாளர் நமசிவாயம் ஜீவகுமார், வர்த்தகர் முகம்மது ஹனீபா முகம்மது தௌபீக் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். (ச-60)



## புதுக்குடியிருப்புக்கு அஞ்சல் வாகனம்!

வவுனியா, மே 9

வவுனியா அஞ்சல் திணைக்களத்துக்குச் சொந்தமான வாகனத்தின் மூலம் வவுனியாவிலிருந்து புதுக்குடியிருப்பு வரையான அஞ்சல் விநியோக சேவைகள் பல வருடங்களுக்குப் பிறகு நேற்று மீண்டும் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த பல வருடங்களாக வவுனியா அஞ்சல் திணைக்களத்தில் போதிய வாகன வசதிகள் இன்மையால் அஞ்சல் பொதிகள் மற்றும் கடிதங்களை வவுனியாவிலிருந்து புதுக்குடியிருப்புக்குக் கொண்டு செல்வதற்கு அரச பேருந்துகள் பயன்படுத்தப்பட்டு வந்தன. இந்நிலையில் நேற்றுக் காலை வவுனியா அஞ்சல் திணைக்கள வளாகத்தில் திணைக்கள இலச்சினை பொறிக்கப்பட்ட வாகனம் புதுக்குடியிருப்பு நோக்கிய தனது சேவையை ஆரம்பித்தது. (ச-110,246)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,மே 9

வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலின் 2026ஆம் ஆண்டுக்கான வழிபடுநர் பேரவைப் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் ஆலயப் புவனேஸ்வரி திருமண மண்டபத்தில் ஆலய அறங்காவலர் சபைத் தலைவர் கு.சரவணபவானந்தன் தலைமையில் இடம்பெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில் 2023, 2024, 2025ஆம் ஆண்டுகளுக்கான பொருளாளர் கணக்கறிக்கை சமர்ப்பித்தலும் புதிய அறங்காவலர் தெரிவும் இடம்பெறும். (ச-66)

## சுகாதார விதிமுறை மீறல்; உணவகத்துக்குத் தண்டம்

புலோலிப்பகுதியில்சுகாதாரச்சீர்கேடுகளுடன் இயங்கிய உணவகத்துக்குப் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தால் 40 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளது. புலோலி பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போது, உணவகம் ஒன்றில், கழிவுநீரை வெளிச்சுற்றாடலுக்கு அப்புறப்படுத்தியமை, உடல்நலத்தகுதியை உறுதிப்படுத்தும் மருத்துவச் சான்றிதழ் இல்லாமல் உணவைக் கையாண்டமை, தனிநபர் சுகாதாரம் பேணாமல் உணவைக் கையாண்டமை மற்றும் வெளிச்சுற்றாடலால் பாதிக்கப்படக்கூடியவாறான சூழலில் உணவைத் தயாரித்தமை உள்ளிட்ட சுகாதாரச் சீர்கேடுகள் கண்டறியப்பட்டன. உணவகத்துக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது குற்றச்சாட்டுகளை உரிமையாளர் ஏற்றுக்கொண்டதன் அடிப்படையில் 40,000 ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டது. (ச-100)

## இசை அரங்கு

யாழ்ப்பாணம், மே 9

இணுவில் அறிவாலயம் நடத்தும் வருடாந்தச் சித்திரைப் புத்தாண்டுச் சிறப்பு இசை அரங்கு நிகழ்வு இன்று சனிக்கிழமை மாலை 5 மணியளவில் இணுவில் அறிவாலய அரங்கில் நடைபெறவுள்ளது. (ச-66)

## இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். ஆனால், புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும்.

**இடபம்:** மனதில்சஞ்சலம்ஏற்பட்டுநீங்கும். தாயின் தேவையை நிறைவேற்ற சிறிது அலையவேண்டியிருக்கும். நீண்டநாள்களாகநிறைவேற்றவேண்டும் என்று நினைத்திருந்த தெய்வப் பிரார்த்தனைகளை இன்று நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும்.

**மிதுனம்:** தெய்வ அனுக்கிரகம் நிறைந்த நாளாக இருக்கும். நீண்டநாள்களாக எதிர்பார்த்து ஏமாந்த பணம் இன்று கைக்கு வந்து மகிழ்ச்சி தரும். சிலருக்கு மகான்களைத் தரிசிக்கவும் அவர்களுடைய ஆசிகளைப் பெறவும் வாய்ப்பு ஏற்படும்.

**கடகம்:** அதிர்ஷ்டகரமான நாளாக இருக்கும். சகோதரவகையில் ஆதாயம் ஏற்படக்கூடும். உறவினர்கள் வருகையால் வீட்டில் சிறுசிறு சலசலப்புகள் ஏற்படக்கூடும். எதிர்பார்த்த பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**சிம்மம்:** மகிழ்ச்சி தரும் நாளாக இருக்கும். வாழ்க்கைத்துணையுடன் ஏற்பட்டிருந்த மனவருத்தம் நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும். வெளியூர்ப் பயணங்களைத் தவிர்க்கவும். தந்தைவழியில் சில செலவுகள் ஏற்படக்கூடும்.

**கன்னி:** புதிய முயற்சிகள் அனுகூலமாக முடியும். குடும்பப் பொறுப்புகளை நிறைவேற்றுவதில் அலைச்சலும் சோர்வும் உண்டாகும். சகோதரவகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**துலாம்:** உற்சாகமான நாளாக இருக்கும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் பெரியவர்களின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும்.

**விருச்சிகம்** மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். தாய்வழியில் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். வாழ்க்கைத்துணையுடன் அனுசரித்துச் செல்லவும். உறவினர்கள் வருகையால் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு இருக்காது.

**தனுசு:** புதிய முயற்சி சாதகமாகமுடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மகரம்:** அதிர்ஷ்டம் தரும் நாளாக இருக்கும். சகோதரர்கள் உதவிகேட்டு வருவார்கள். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**கும்பம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டிய நாள். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். சிலருக்கு நவீன டிசைனில் ஆடைகள் வாங்கும் வாய்ப்பு ஏற்படும்.

**மீனம்:** இன்று புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. குடும்பப் பொறுப்புகளின் காரணமாக அலைச்சல் ஏற்படக்கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

# அதிகரிக்கும் நம்பிக்கையீனம்..!

தமிழ்ச் சட்டத்தரணிகள் பேரவையில் தமது தரப்பு திட்டமிட்டுப் புறக்கணிக்கப்படுகின்றது என்று, தனது அதிருப்தியை வெளிப்படையாகப் பதிவு செய்துள்ளார் தமிழ்த் தேசியப் பேரவையின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம். ஈழத்தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளை முன்னிறுத்தி, இனப்பிரச்சினைக்கு அனைவரும் ஏற்கும் படியான தீர்வுத்திட்டத்தை உருவாக்குவதற்காக அனைத்துத் தமிழ்த் தேசியக்கட்சிகளையும் ஓரணியில் இணைக்கும்நடவடிக்கையை தமிழ்ச்சட்டத்தரணிகள் பேரவை முன்னெடுத்து வருகின்றது. மிக நீண்ட காலத்துக்குப் பின்னர், அனைத்துக் கட்சிகளையும் ஒரே தளத்துக்குக் கொண்டுவருவதற்கான கடினமான முயற்சிகள் இடம்பெற்று வரும் நிலையில்தான், தாம் புறக்கணிக்கப்படுகின்றோம் என்று உணரத் தலைப்பட்டுள்ளார் நாடாளுமன்ற உறுப்பினரான கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.


2009ஆம் ஆண்டு விடுதலைப்புலிகளின் ஆயுதங்கள் மௌனித்த காலத்தில் இருந்து தற்போதுவரை ஈழத்தமிழர்களுக்கான அரசியற் தீர்வு தொடர்பில் இதுவரை அழுத்தம் திருத்தமான எந்தவொரு முன்மொழிவும் பொதுவான குரலாக முன்வைக்கப்படவில்லை. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி, தமிழரசுக் கட்சி என அனைத்துத் தரப்புகளும் திக்கொன்றும் திசையொன்றாகவுமே இந்த விடயத்தில் இயங்கி வந்தன. சில சந்தர்ப்பங்களில் அவை முன்பின் முரணான கருத்துகளையும் வெளிப்படுத்தியிருந்தன. இந்த இடியப்பச் சிக்கல்நிலை, தமிழ்த் தேசியப் பரப்பில் கடந்த இரண்டு தசாப்தங்களாக தீராக்குறையாகவே இருந்துவந்தது. அந்தக் குறைபாடுகளை நிவர்த்தி செய்யக்கூடிய அரிய வாய்ப்பு தமிழ்ச் சட்டத்தரணிகள் பேரவை ஊடாகக் கிட்டியிருந்த போதிலும், அந்த முயற்சிகளும் தற்போது நம்பிக்கையின்மையைத்தான் அதிகரிக்கின்றன.

தமிழ்ச் சட்டத்தரணிகள் பேரவையின் கீழ் ஒன்றுபட்டிருந்த தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு இடையில் சந்தேகங்கள்- கிலேசங்கள்-பின்னடைவுகள் -முரண்கள் ஏற்பட்டுள்ளமை மிக ஆபத்தான அறிகுறி. ஓர் இனமாக நாம் எவ்வளவுதூரம் பல வீனப்படுகின்றோம் என்பதையே இது வெளிப்படுத்துகின்றது. எவரிடம் சரி, எவரிடம் தவறு என்பதற்கு அப்பால், இந்த விடயம் உடனடியாகச் சரிசெய்யப்படவேண்டும். ஏனெனில், ஈழத்தமிழர்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் ஸ்ரீலங்கா அரசாங்கம் பாராமுகமாக இருந்ததற்கு தமிழ்த் தேசியக்கட்சிகளுக்குள் நிலவிய மாறுபட்ட கருத்துகள் மற்றும் முன்பின் முரணான நிலைப்பாடுகள் என்பனவே பிரதான காரணிகள். இதில் இரண்டாவது கருத்துக்கு இடமில்லை.

இனப்பிரச்சினைக்கான தீர்வை நோக்கிய எமது பயணம் வேகமாகவும், துல்லியமானதாகவும் இருக்கவேண்டுமாயின், அதை நோக்கிய எமது பாதை தெளிவானதாக அமையவேண்டியது அவசியம். எனவே, காலத்தின் தேவையறிந்து மேற்கொள்ளப்பட் டிருக்கும் இந்த நடவடிக்கையை தமிழ்ச் சட்டத்தரணிகள் பேரவையினர் மிகுந்த சிரமத்துக்கு மத்தியிலாவது தொடர்ச்சியாக முன்கொண்டு செல்லவேண்டும். அதற்கு அனைத்துத் தரப்புகளும் பரஸ்பரம் விட்டுக்கொடுப்புடன் செயற்பட முன்வரவேண்டும்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com






## பொய்யாமொழி

**நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது**
**அன்றே மறப்பது நன்று**

**பொருள்:** ஒருவர் முன்செய்த நன்மையை மறப்பது அறம் அன்று; அவர் செய்த தீமையைச் செய்த அப்பொழுதே மறந்து விடுவது அறம் ஆகும்.



# மர்மக் காய்ச்சல் பரவல் 4 பாடசாலைகள் பூட்டு!



கொழும்பு,மே 9

**தெனியாய கல்வி வலயத்தில் பரவிவரும் காய்ச்சல் காரணமாக நான்கு பிரதான பாடசாலைகள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதுடன், இதுதொடர்பான மேலதிக விசாரணைகளுக்காக சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு நிபுணர்கள் தெனியாயவுக்குச் சென்று ஆராயவுள்ளனர்.**

காய்ச்சல் வேகமாகப் பரவினாலும் இது இன்னும் ஒரு 'தொற்று நோய்' நிலைக்குத் தீவிரமடையவில்லை. மாணவர்களிடையே பரவல் அதிகரிப்பதைக் கட்டுப்படுத்தவே பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. பாடசாலைகளை மீண்டும் திறப்பது குறித்த இறுதித் தீர்மானம், நிபுணர் குழுவின் அறிக்கையின் அடிப்படையில் எடுக்கப்படும் எனத் தென் மாகாணக் கல்விச் செயலாளர் என்.கே.ஆர். பத்திரண தெரிவித்துள்ளார். (ச-இ)

## வாவியிலிருந்து சடலங்கள் மீட்பு

மட்டக்களப்பு, மே 9

மட்டக்களப்பு வாவியில் அடையாளம் தெரியாத இரண்டு ஆண்களின் சடலங்கள் நேற்றுமுன்தினம் மாலை மீட்கப்பட்டுள்ளன என்று மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலங்களை அடையாளம் காண்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், நீதிமன்ற அனுமதியைப் பெற்று பிரேதப் பரிசோதனைக்காக சடலங்கள் மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச-இ)



## விமானப் போக்குவரத்து இஸ்ரேலுக்கு ஆரம்பம்!

மத்திய கிழக்கின் பதற்றமான சூழலால் தடைப்பட்டிருந்த இஸ்ரேலுக்கான விமானசேவைகள் வழமைக்குத் திரும்பியுள்ளன. இஸ்ரேலில் வேலைவாய்ப்புப் பெற்ற ஒரு தொகுதி இலங்கையர்கள் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை புறப்பட்டுச் சென்றுள்ளனர். மொத்தம் 47 பேர் அடங்கிய குழுவினரே இஸ்ரேல் நோக்கிப் பயணித்துள்ளனர். (ச-இ)

## புகை தள்ளும் வாகனங்கள் கறுப்புப் பட்டியலில் சேர்ப்பு!

கொழும்பு,மே 9

அதிகப்படியான புகை வெளியேற்றம் தொடர்பாக பிறப்பிக்கப்பட்ட பராமரிப்பு உத்தரவுகளைப் பின்பற்றத் தவறும் வாகனங்கள் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்படும் என மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது. கருப்புப் புகை வெளியேறுவது வெறும் தொழில்நுட்பக் குறைபாடு மட்டுமல்ல, அது வருங்கால சந்ததியினரைப் பாதிக்கும் ஒரு சுற்றுச்சூழல் அபாயமுமாகும். எனவே கன உரிமையாளர்கள் முறையான பராமரிப்பை மேற்கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ச-இ)

# வணிக வளாகத்துக்குள் புகுந்து 13 இலட்சம் ரூபா கொள்ளை!

கொழும்பு, மே 9

தெஹிவளை பகுதியில் அமைந்துள்ள வணிக வளாகம் ஒன்றினுள் கூர்மையான ஆயுதங்களுடன் புகுந்த 6 பெண்கள் உள்ளடங்கிய 10 பேர் கொண்ட குழுவினர், அங்கிருந்த ஊழியர்களைத் தாக்கி சுமார் 13 இலட்சம் ரூபா பணத்தைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர் என்று தெஹிவளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இரும்புக் கம்பிகள் மற்றும் கூர்மையான ஆயுதங்களைக் கொண்டு அங்கிருந்த ஊழியர்களைத் தாக்கிய குழுவினர், பையொன்றில் வைக்கப்பட்டிருந்த 13 இலட்சத்து 9 ஆயிரம் ரூபா பணத்தைத் திருடித் தப்பிச் சென்றுள்ளனர். அவர்கள் ரயில் தண்டவாளம் வழியாக நடந்தே தப்பிச் சென்றுள்ளமை ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பாக வணிக வளாகம் மற்றும் அங்கிருந்த சி.சி.ரி.வி. கமராக்களில் பதிவாகியுள்ள காட்சிகளின் அடிப்படையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-இ)

நாளை
ஞாயிற்றுக்கிழமை- சித்திரை 24
10.05.2026
சுபநேரம் : 08.54 - 10.24
ராகுகாலம் : 04.24 - 05.54

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# அனர்த்த மேலாண்மைக்காகவே அவசரகாலச்சட்டம் பயன்பாடு!

## பிரதமர் ஹரிணி தெரிவிப்பு

**கொழும்பு, மே 9**

**'டித்வா' புயல் அனர்த்தத்தால் ஏற்பட்ட பாதிப்புகளிலிருந்து நாட்டை மீட்கவும், அத்தியாவசியச் சேவைகளைத் தடையின்றி வழங்கவுமே அவசரகாலச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்று நாடாளுமன்றில் பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

அவசரகாலச் சட்டம் தொடர்பில் கடந்த காலங்களில் ஏற்பட்ட கசப்பான அனுபவங்களைக் கொண்டு தற்போதைய அரசாங்கத்தை மதிப்பிடவேண்டாம். இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி எவரும் கைதுசெய்யப்படவில்லை. போதைப்பொருள் சுற்றிவளைப்புகள் கூடச் சாதாரண பொதுச் சட்டத்தின் கீழேயே நடைபெறுகின்து. அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டவர்களில் 99 சதவீதமானோருக்கு ஏற்கனவே நிவாரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்குத் தலா 25,000 ரூபா நிவாரணத்தொகை வழங்கப்பட்டுள்ளது. கடற்றொழிலாளர்கள், பெருந்தோட்டத் தொழிலாளர்கள் என அனைத்துத் துறையினருக்கும் இழப்பீடுகள் வழங்கப்பட்டுள்ளன. வீடுகளை இழந்தவர்களுக்குப் புதிய வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. எனினும், மீண்டும் அனர்த்தம் ஏற்படும் அபாயம் உள்ள பகுதிகளில் மீள்குடியமர்த்தல் செய்யமுடியாது என்பதால் சில இடங்களில் தாமதம் நிலவுகிறது. கடந்த காலங்களில் அவசரகாலச் சட்டம் தவறாகப் பயன்படுத்தப்பட்டதால் மக்களுக்கு அதன் மீது அச்சம் இருப்பது நியாயமானது. எக்காரணம் கொண்டும் இந்தச் சட்டம் தவறாகப் பயன்படுத்தப்படமாட்டாது- என்றார். (ச-இ)

# திறைசேரி நிதி கையாள்கை இந்தியாவிடம் பாடம் கற்க!

## வாசுதேவ நாணயக்கார தெரிவிப்பு

கொழும்பு,மே 9

இந்தியாவின் மிகப்பெரிய திறைசேரியிலிருந்து ஒரு சிறு தொகை கூடக் காணாமல்போன வரலாறு இல்லாத நிலையில், இலங்கையில் 2.5 மில்லியன் டொலர் கொள்ளையடிக்கப்பட்டிருப்பது நாட்டின் பொருளாதாரப் பாதுகாப்பைக் கேள்விக்குறியாக்கியுள்ளது என்று வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

மின்னஞ்சல் பிழை அல்லது வங்கிக் கணக்குத் தவறு எனக் கூறி அரசாங்கம் தப்பிக்கமுடியாது. நிதி அமைச்சர் முதல் ஆவணங்களில் கையொப்பமிட்ட அதிகாரிகள் வரை அனைவரும் இதற்குப் பொறுப்பேற்கவேண்டும். திருடர்கள் தாங்கள் கொள்ளையடித்த பணத்தை மீண்டும் கொண்டு வந்து தருவார்கள் என்று நம்புவது முட்டாள் தனம். மக்களை ஏமாற்றவே அரசாங்கம் இவ்வாறான கதைகளைக் கூறுகிறது. அரசாங்கத்தால் முறைப்பாடு செய்ய அனுப்பப்பட்ட ஒரு அதிகாரி மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார்.

இது தற்கொலையா அல்லது கொலையா என்பதை நீதிமன்றமே தீர்மானிக்க வேண்டும்; பொலிஸார் அவசரப்பட்டு உண்மைகளை மூடிமறைக்கக் கூடாது. அரசின் டிஜிற்றல் முறைமை மக்களின் வாழ்வை எளிதாக்குவதற்குப் பதிலாக, அவர்களின் சட்டைப்பையைச் சுரண்டுவதையே நோக்கமாகக் கொண்டுள்ளது- என்றார். (ச-இ)

## வியட்நாம் ஜனாதிபதிக்கு வரவேற்பு

கொழும்பு, மே 9

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் அழைப்பின் பேரில், இலங்கைக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டுள்ள வியட்நாம் சோசலிசக் குடியரசின் ஜனாதிபதியும் வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழுவின் பொதுச் செயலாளருமான டோ லாம்மை வரவேற்கும் உத்தியோகபூர்வ நிகழ்வு, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலக வளாகத்தில் நடைபெற்றது. பொலிஸ் குதிரைப்படைப் பிரிவினரின் மரியாதையுடன் ஜனாதிபதி அலுவலக வளாகத்திற்கு அவர் அழைத்து வரப்பட்டார். முழுமையான அரசகௌரவத்துடன் மரியாதை வேட்டுக்கள் தீர்க்கப்பட்டு வியட்நாம் ஜனாதிபதி வரவேற்கப்பட்டார். (எ-இ)

# காணாமலாக்கப்பட்டோர் தேடல் காகிதக் கோப்பல்ல; ஆறாத வடு;

## வடக்கு ஆளுநர் தெரிவிப்பு!

யாழ்ப்பாணம், மே 9

உயிரிழந்தால் ஏற்படும் வலியை விட, என்ன ஆனார் என்று தெரியாமல் தவிப்பதே கொடியது. அலுவலகங்களை நாடி வரும் அந்த உறவுகளை அலைக்கழிக்காமல் கௌரவத்துடன் நடத்துங்கள் என்று வடக்கு மாகாண ஆளுநர் தெரிவித்துள்ளார். காணாமற்போனோர் பற்றிய அலுவலகத்தால் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் விழிப்புணர்வு வேலைத்திட்டம் வடக்கு மாகாண ஆளுநர் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் திறன் விருத்தி நிலையத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் உரையாற்றும் போதே ஆளுநர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் எதிர்நோக்கும் வலியை உணர்வுபூர்வமாக அணுகவேண்டியது அதிகாரிகளின் மனிதாபிமானக் கடமையாகும்.

நீதியைத் தேடும் பொறிமுறை ஒருபுறம் தொடரும் அதே வேளை, அந்தக் குடும்பங்களின் அன்றாடப் பொருளாதார இருப்புக்காகக் கிடைக்கவேண்டிய காணாமல் ஆக்கப்பட்டவரின் ஓய்வூதியம், ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி உள்ளிட்ட கொடுப்பனவுகளை எவ்வித தாமதமுமின்றிப் பெற்றுக்கொடுக்க எமது அதிகாரிகள் முன்னின்று உழைக்க வேண்டும்.

'இறந்தவராகக் கருதும் சான்றிதழ்' அல்லது 'காணாமல் ஆக்கப்பட்டவர் சான்றிதழ்' பெறுவதால் நீதியைத் தேடும் தேடல் முடங்கிவிடும் என்பது தவறான கருத்தாகும். நிர்வாகத் தேவைகளுக்காகச் சான்றிதழ்களைப் பெறுவது விசாரணைகளை எந்த வகையிலும் பாதிக்காது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில், குறிப்பாக வடக்கில் செம்மணி உள்ளிட்ட பல இடங்களில் மனிதப் புதைகுழிகள் அகழ்வு செய்யப்பட்டு வருகின்றன. காணாமல் ஆக்கப்பட்டோருக்கும் இந்தப் புதைகுழிகளுக்கும் இடையிலான தொடர்புகளை காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் சட்டரீதியாகக் கையாளுவதற்கு அப்பால், எமது நிர்வாக அதிகாரிகளுக்கு இதில் ஒரு பொறுப்பு உள்ளது.

இந்த அரசாங்கத்தில் உள்ள பலரும் காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளைத் தேடி அலைந்தவர்கள்தான். அதனால் இந்த வலியின் ஆழம் அவர்களுக்குத் தெரியும். அரசாங்கத்தின் இந்த நேர்மறையான நிலைப்பாட்டை, அதிகாரிகளாகிய நாம் மக்களின் நலனுக்காகச் சரிவரப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்- என்றார். (ச-66,113)

# பொருளாதாரப் பாதுகாப்பின்மை பயங்கரவாதத்தைவிடக் கொடியது!

## பைசர் முஸ்தபா எம்.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு,மே 9

நாட்டின் வங்கி அமைப்பு மற்றும் நிதிப் பரிமாற்றங்களில் ஏற்பட்டுள்ள பலவீனங்கள், தேசத்தை மிகப்பெரிய பேரழிவுக்கு இட்டுச்செல்லும் என நாடாளுமன்ற உறுப்பினர் பைசர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற அவசரகால சட்டத்தை நீடிக்கும் வர்த்தமானி மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

அண்மையில் திறைசேரியிலிருந்து 2.5 மில்லியன் டொலர் காணாமல் போனமை மற்றும் வங்கி அமைப்பின் பாதுகாப்பற்ற தன்மை வெளிநாட்டு முதலீட்டாளர்களை அச்சுறுத்தும். வங்கிகளைக் கண்காணிக்க மத்திய வங்கி கோடிக்கணக்கான ரூபாவை அறவீடு செய்தும், நிதிப் பாதுகாப்பை உறுதிப்படுத்தத் தவறிவிட்டது. மக்களிடையே வங்கித்துறை மீதான நம்பிக்கை அற்றுப்போவது, பயங்கரவாதத்தை விடவும் பாதிப்பை ஏற்படுத்தும். நிதிப்பாதுகாப்பு குறித்து ஆராய உடனடியாக விசேட செயலணி ஒன்றை அமைக்கவேண்டும். அரசு இயந்திரம் சரியாகச் செயற்பட்டால் இவ்வாறான விசேட சட்டங்கள் தேவையற்றவை. ஜப்பானில் ஒரு ரயில் ஒரு நிமிடம் தாமதமானாலும் அமைச்சர் பதவி விலகுகிறார். இலங்கையில் அமைச்சர்களும் அதிகாரிகளும் தமது பொறுப்புகளைத் தட்டிக்கழிக்கின்றனர். அதிகாரிகள் தனிப்பட்ட ரீதியில் நேர்மையானவர்களாக இருக்கலாம், ஆனால் தமது நிறுவனங்களில் நடக்கும் தவறுகளுக்கு அவர்களே பொறுப்பேற்க வேண்டும். கடந்த காலத் தவறுகளைத் திருத்தி மாற்றத்தைக் கொண்டுவரவே மக்கள் உங்களுக்கு அதிகாரம் தந்தார்கள்; அதைச் சரியாகச் செய்யுங்கள்- என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



கடந்த 09.04.2026 வியாழக்கிழமை
அன்று இறைபதம் அடைந்த

**அமரர் திருமதி தம்பிஜயா சறோஜினிதேவி (தனம்)**

**திதி: அபரபட்ச சப்தமி**

**அன்னை மடியில்**
**16.12.1934**

**இறைவன் மடியில்**
**09.04.2026**

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (09.05.2026) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்மா சாந்திப்பிரார்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் உற்றார், உறவினர், நண்பர்கள் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அன்னாரது மறைவுசெய்தி கேட்டு நேரில் வந்தும் தொலைபேசி, சமூக ஊடகங்கள் வழியாகவும் ஆறுதல் கூறிய அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

**பாப்பா தோட்ட லேன்,**
**இனுவில் மேற்கு, இனுவில்.** (cs. 31769) (N-1) **குடும்பத்தினர்**

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# 2ஆம் ஆண்டு நீங்காத நினைவுகள்



**தோற்றம்**
**02 . 06 . 1938**

**மறைவு**
**01 . 05 . 2024**

**அமரர். நற்குணராசா மனோன்மணி**

**திதி: தேய்பிறை அட்டமி (09.05.2026)**

ஆண்டு இரண்டு அகன்று போனாலும்
உன் அன்பு முகம் அகலவில்லை! - அம்மா
பாசம் பேசி எமை அணைத்த
அந்த பொற்காலம் மீண்டும் வருமா?
ஈசன் அடி உறங்கு தாயே. சாந்தி ! சாந்தி !!

**மீசாலை வடக்கு,**
**கொடிகாமம்.** (CS/61395) J-1 **குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்



**தோற்றம்**
**25 . 04 . 1955**

**மறைவு**
**05 . 05 . 2026**

**தவமலர் நித்தியானந்தம்**

சங்கானை கிழக்கு, பழைய தபாற்கந்தோர் வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தவமலர் நித்தியானந்தம் அவர்கள் கடந்த (05.05.2026) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - தையலம்மா தம்பதியரின் இளைய மகளும், காலஞ்சென்றவர்களான நல்லையா - பூமணி தம்பதியரின் மருமகளும், நித்தியானந்தம் அவர்களின் அன்பு மனைவியும், சிவாஜினி (London), நீரத்திகா (London) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜெயக்குமார் (London), ஜெயதாசன் (London) ஆகியோரின் அன்பு மாமியாரும், கேஷினி, மிருஷன், அப்சரா, தஷ்வின், விகான், லித்திகா ஆகியோரின் அன்பு பேர்த்தியும், ஜெயபாலகிருஷ்ணன், காலஞ்சென்ற மகேந்திரன் மற்றும் செல்வமலர், மகாதேவன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.05.2026) ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சங்கானை கரைச்சி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**பழைய தபாற்கந்தோர் வீதி, சங்கானை.**
**தொடர்புகளுக்கு:-**
**077 617 8099, 076 832 8607**

(CS/61402) J-1

# தேவை

வடமாகாணத்தில் அச்சுத் துறையில் பிரபலம் பெற்ற **"Arissona pvt ltd"** நிறுவனத்துடன் இணைந்து பணிபுரிய தங்களுக்கு அரியதொரு வாய்ப்பு.

❖ **வரவேற்பாளர் - Receptionist**
- பெண்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்
- 21 தொடக்கம் 35 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- கணிணி அறிவு உள்ளவராக இருத்தல் வேண்டும்.
- மும்மொழியிலும் பரீட்சயமானவராக இருத்தல் விரும்பத்தக்கது. முன் அனுபவம் விரும்பத்தக்கது

❖ **காசாளர் - Cashier**
- பெண்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.
- 21 தொடக்கம் 35 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்
- கணிணி அறிவு உள்ளவராக இருத்தல் வேண்டும்.
- முன் அனுபவம் விரும்பத்தக்கது

❖ **வடிவமைப்பாளர் - Graphic Designer**
- ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.
- முன் அனுபவம் விரும்பத்தக்கது
- Coral Draw, Adobe Illustrator, Photo Shop, Indesign போன்றவற்றில் பரீட்சயமானவராக இருத்தல் வேண்டும்.
- Coral Draw, Adobe Illustrator, Photo Shop, Indesign போன்றவற்றில் அடிப்படை அறிவுடன் பழக விரும்பவர்களும் விண்ணப்பிக்கலாம்.

❖ **அச்சு இயந்திரங்களை இயக்குபவர் (Mechine Opeator)**
- முன் அனுபவம் விரும்பத்தக்கது.

❖ **அலுவலக உதவியாளர் (Office Boy)**
- ஆண்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

**பிற மாவட்டங்களிலிருந்து வந்து பணிபுரிய விரும்புபவரிற்கு தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும்.**

மேற்குறிப்பிட்ட தகமைகளுக்கு விண்ணப்பிப்போர் தங்களது சுயவிபரக் கோவை, அடையாள அட்டை போட்டோபிரதி, சான்றிதழ்களின் போட்டோபிரதி ஆகியவற்றை இணைத்து 20.05.2026 இற்கு முன்னதாக விண்ணப்பிக்கவும்.

மின்னஞ்சல் முகவரி - **arissonaa@yahoo.com**
தபால் முகவரி - **"Arissona pvt ltd"**
91, பலாவி வீதி,
திருநெல்வேலி.
வட்சப் இலக்கம் **(WatsAPP No) - 0774779450**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மரண அறிவித்தல்



## தனநாயகம் சுதாகரன்

**(உரிமையாளர் - பானுஜன் மரக்காலை)**

மீசாலையை பிறப்பிடமாகவும், கனக்கர் சந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட தனநாயகம் சுதாகரன் (உரிமையாளர் - பானுஜன் மரக்காலை) நேற்று (08.05.2026) வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தனநாயகம் மற்றும் சுசிலாதேவி தம்பதியரின் அன்பு மகனும், ஆனந்தபவானி அவர்களின் அன்புக் கணவரும், சஜித்திரா, கர்னி ஆகியோரின் அன்பு மாமனாரும், லிதிக்ஷா, கெளிஷா ஆகியோரின் அன்புப் பேரனும், பாஸ்கரன், நந்தீபா (அவுஸ்ரேலியா), நிலானி (சுவிஸ்), ஜனார்த்தனன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், தனபாலசிங்கம், செல்வராணி ஆகியோரின் அன்பு மருமகனும், சிவதர்ஷன், ஆனந்தகௌரி (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.05.2026) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் மீசாலை வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தோற்றம்**
**07.06.1974**

**மறைவு**
**08.05.2026**

தகவல் :
**குடும்பத்தினர்.**

(CS/61401) J-1

# மரண அறிவித்தல்



**தோற்றம்** 17 • 06 • 1948

**மறைவு** 05 • 05 • 2026

## செல்வி சிவசம்பு சந்திரரோதயம்

மண்டைதீவு 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி சிவசம்பு சந்திரரோதயம் அவர்கள் 05.05.2026 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசம்பு - கனகம்மா தம்பதியரின் மூத்த புதல்வியும், சந்திகாந்தி, காலஞ்சென்ற சந்திரவதனா, தவநாயகி, உதயகுமார், சந்திரவடிவு, செல்வகுமார், நந்தகுமார், சந்திரமதி, ஜெயகுமார் ஆகியோரின் சகோதரியும், மகேஷன், காலஞ்சென்ற சிவமணி மற்றும், கனகரத்தினம், யசிந்தா, ரவீந்திரன், அனுசா, அனுஷா, இந்திரன், குமுதா ஆகியோரின் மைத்துனியும், சோபிகா, சாமந்தி, விவேக்கா, சரண்யா, சம்யுக்தா, துவாரகா, வாரணன், விதுஷிகா, அருணன், அஸ்மிகா, விதுசன், சுபாங்கி, நிலானிகா ஆகியோரின் பெரியம்மாவும், நிரூபனா, நிவேத், அஜிதன், அபிஷனா, அபூர்வணா, ஆதனா, சயானா, விசால், விகாஷ், ஆரதி, சச்சின், அனிருத் ஆகியோரின் அத்தையும் ஆவார்.



**தோற்றம்** 05 • 01 • 1954

**மறைவு** 05 • 05 • 2026

## திருமதி சிவமணி சந்திரவதனா

(ஓய்வு நிலை ஆசிரியர்)

மண்டைதீவு 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திருமதி சிவமணி சந்திரவதனா அவர்கள் 05.05.2026 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிவமணியின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சிவசம்பு - கனகம்மா தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - புவனேஸ்வரி தம்பதியரின் மருமகளும், விவேக்காவின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சந்திரரோதயம் மற்றும் சந்திகாந்தி, தவநாயகி, உதயகுமார், சந்திரவடிவு, செல்வகுமார், நந்தகுமார், சந்திரமதி, ஜெயகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரியும், மாசிலாமணி (கனடா), நடனசிகாமணி, காலஞ்சென்ற நடராஜமணி மற்றும் புஷ்பமாலா (கனடா), பிரபுசிகாமணி (கனடா), கலையரசி (கனடா), மாதினி (கனடா), மகேஷன், கனகரத்தினம், யசிந்தா, ரவீந்திரன், அனுசா, அனுஷா, இந்திரன், குமுதா ஆகியோரின் மைத்துனியும், காஞ்சனமாலா, சிவகலை, ஞானசொரூபி, சுப்பிரமணியம், ஆனந்தி, ஞானேஸ்வரன், விஜயரட்ணம் ஆகியொரின் சகலியும் ஆவார்.

அன்னார்களது இறுதிக்கிரியைகள் நாளை (10.05.2026) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவல் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மண்டைதீவு தலைக்கீரி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**6 ஆம் வட்டாரம், மண்டைதீவு.**

(cs 61393) (N-1)

**தகவல் : குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நிலக்கரி மோசடி விசாரணை ஆணைக்குழுவின்பணிஆரம்பம்

கொழும்பு, மே 9

**2009ஆம் ஆண்டு முதல் 2026 ஏப்ரல் 16 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் நிலக்கரி இறக்குமதி தொடர்பான முறைகேடுகளைக் கண்டறிய ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட விசேட விசா**

நிலக்கரி இறக்குமதி, நிலக்கரியைப் பயன்படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்தல் மற்றும் அது சார்ந்த ஏனைய செயற்பாடுகளில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல்கள், முறைகேடுகள் மற்றும் சட்ட விரோதச் செயல்கள் குறித்து விசாரிப்பதே இந்த ஆணைக்குழுவின் பிரதானபணியாகும். இந்த ஆணைக்குழுவின் அலுவலகம் கொழும்பு 12, அதிக்கரன மாவத்தை, 'அதிக்கரன பியச' வளாகத்திலுள்ள நீதவான் நீதிமன்றக் கட்டடத்தொகுதியின் 5ஆவது மாடியில் அமைக்கப்பட்டுள்ளது. நிலக்கரி இறக்குமதி தொடர்பான முறைகேடுகள் தொடர்பாக ஏதேனும் தகவல்கள் அல்லது சாட்சியங்கள் பொதுமக்களிடமோ அல்லது நிறுவனங்களிடமோ இருந்தால், அவற்றை எதிர்வரும் 22ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க முடியும் என்று ஆணைக்குழு கோரிக்கை விடுத்துள்ளது. (எ-இ)



கைதடி சமுர்த்தி வங்கியின் சித்திரைப் புதுவருட விளையாட்டு நிகழ்வு கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலைய மைதானத்தில் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் இ.யோகேஸ்வரன் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் மாவட்ட செயலக மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் பொ.ஸ்ரீவர்ணன் பங்கேற்றார். போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. (ச-159)

## பதவி வெற்றிடம்

### Factory Executive Officer

எமது வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கி மற்றும் வட்டுக்கோட்டை கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் இணைந்து நடாத்தும் பால்வள அபிவிருத்திக்கான திட்டமொன்றை முன்னெடுத்துள்ளது. அதற்காக வட்டுக்கோட்டை கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்க உற்பத்தி தொழிற்சாலைக்கு இதன் நிமித்தம் ஒரு உற்பத்தி அலுவலர் தேவைப்பாடு உள்ளது.

**தகைமைகள்**

1. Degree/ Diploma in Food Production Technology or Food Science and Technology
2. **நேர்முகத்தேர்வு இடம்பெறும்**
   **காலம்** :- 11 th May 2026
   **நேரம்** :- 9.30 am
   **இடம்** :- வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கி,
   முதியோர் இல்ல வளாகம், கண்டி வீதி, கைதடி.
3. சுயவிபரக்கோவை மற்றும் தேவையான கல்வித்தகைமைச் சான்றிதழ் பிரதியுடன் மேற்படி தகைமையுடையோர் நேர்காணலில் கலந்துகொள்ள முடியும்.

தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம் :-

**021-223-2673, 0715238127**

**மனித வள முகாமையாளர்**
**NCDB**

(cr47514) (N-1)

## மணிவிழா வாழ்த்து

Best Wishes

### திரு.செல்லத்துரை நவரெத்தினராசா (S.L.P.S - II)

### (அதிபர், மு/ தென்னியன்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை)



Congratulations

இன்றைய தினம் மணிவிழாக்காணும் எமது பாடசாலையின் முதல்வர் அவர்களுக்கு மணிவிழா வாழ்த்துக்களையும் ஓய்வுக்காலங்களில் நீண்ட ஆயுளோடும் தேக ஆரோக்கியத்தோடும் வாழ இறை ஆசியையும் வேண்டி நிற்கின்றோம்.

ஆளுமையின் அழகாய்
அயராத பொழுதாய்
அமிழ்தினிய தமிழ்மொழியை
ஆழம் அறிந்திட்ட அரனாய்
மனிதம் வென்ற கணிதமதை
இனிதாய் எடுத்துரைத்து
ஆங்கில புலமையிலும்
அறிவுச்சுடர் ஏற்றி நின்று
அதிபர் பணியதனை
அன்போடு அரவணைத்து
அகவை அறுபது கண்டு

ஆறுதல் பெற்றாலும்
எள்ளளவும் குறையாத ஏற்ற நற்பாசமும்
ஏய்க்காத கண்டிப்பும் – கொண்ட
எங்களின் ராஜாவாம்
நவரெத்தின ராஜாவுக்கு
மணிவிழா வாழ்த்துக்களை
மனதார சமர்ப்பிக்கின்றோம்
ஓய்வு காலமதில் ஒய்யாரமாய் உம்பணி
ஒன்று கூட குறையாமல்
ஓங்காரமாய் ஒலித்து நிற்கட்டும்

**சேவை விபரம்**

- 20.01.1989 - 02.02.1992 - மன்/ இலுப்பைக்கடவை மகாவித்தியாலயம் (கணிதம் / விஞ்ஞானம் - ஆசிரியர்)
- 03.02.1992 - 31.12.1992 - மன்/ கூராய் அ.த.க. பாடசாலை (கடமை நிறைவேற்று - அதிபர் முதல் அதிபர் Founder of School)
- 01.01.1993 - 31.12.1993 - மன்/ இலுப்பைக்கடவை மகாவித்தியாலயம் (கணிதம் / விஞ்ஞானம் - ஆசிரியர்)
- 01.01.1994 - 31.12.1995 - மன்/ இலுப்பைக்கடவை மகாவித்தியாலயம் (கடமை நிறைவேற்று - அதிபர்)
- 01.01.1996 - 20.09.1999 - மு/ மல்லாவி மத்திய கல்லூரி (ஆசிரியர் - பகுதித்தலைவர்)
- 21.09.1999 - 07.11.2012 - வலயக் கல்வி அலுவலகம் - துணுக்காய், ஆசிரிய ஆலோசகர், உதவிக்கல்விப்பணிப்பாளர் (விஞ்ஞானம்)
  ICT Coordinator, Emergency Focal Point (Unicef)
  Coordinator, MUSIC Care Project
- 08.11.2012 - 08.05.2026 இன்று வரை மு/தென்னியன்குளம் அ.த.க. பாடசாலை - அதிபர்

வாழ்த்துவோர்:

ஆசிரியர் நலன்புரிச்சங்கம்
மு/ தென்னியன்குளம் அ.த.க. பாடசாலை துணுக்காய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media


# மாணவர்களுக்கு செயலமர்வு


மன்னார், மே 9
கல்விக்குக் கரம் கொடுப்போம் எனும் கருப்பொருளில் மனோன்மணி அறக்கட்டளையின் ஏற்பாட்டில் இவ்வருடம் மன்னாரில் கணித விஞ்ஞானப் பிரிவுகளில் உயர்தர பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கானவிசேட இலவசசெயலமர்வுநேற்று முன்தினம் வியாழக்கிழமை மன்னார் நகர மண்டபத்தில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்டத்தில் கணித விஞ்ஞானப் பிரிவுகளில் மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளை அடையும் நோக்கில் இச்செயலமர்வு முன்னெடுக்கப்படுவதுடன் ஒவ்வொரு வியாழக்கிழமையும் இடம்பெறும். அதிகமான பிரதேசங்களில் அறக்கட்டளையின் நிதியனுசரணையில் மாலை நேர மேலதிக வகுப்புகளும் நடத்தப்பட்டு வருகின்றன.

மன்னார் கல்வி வலயத்தின் மேற்பார்வையின் கீழ் மனோன்மணி அறக்கட்டளையின் ஸ்தாபகர் அகஸ்ரின் சவேரியானின் நிதிப்பங்களிப்பிலும் வழிநடத்தலிலும் மன்னார் வலயக்கல்வி பணிப்பாளரின் அனுமதியுடனும் இந்த நிகழ்வு நடைபெற்றது. நிகழ்வில் மனோன்மணி அறக்கட்டளையின் பணிக்குழாம், மன்னார் வலயக்கல்வி அலுவலக அதிகாரிகள், ஆசிரியர்கள் ஆகியோர் பங்குபற்றினர். (எ-41-56)







நீர்வேலி கந்த சுவாமி கோவிலின் வருடாந்தத் தேர்த் திருவிழாவில் தேர் இருப்பிடத்துக்கு வருகைதந்து புனரமைக்கப்பட்ட அழகிய தேர் தரிப்பிடத்தில் ஆறுமுகப்பெருமானுக்கு பச்சை சாத்தி சிறப்பு பூஜைகள் இடம்பெற்றன. அன்றையதினம் சிறப்பு தவில் நாதஸ்வரக் கச்சேரியும் நடைபெற்றது. (எ-17)

மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரி கைத்திறன் கலைகள் இரண்டாம் வருட மாணவ ஆசிரியர்கள், தமது பாடம் சார்ந்த செயன்முறைப் பயிற்சிக்காக, கிராமிய தொழிற்றுறைத் திணைக்களம் மற்றும் காத்தான்குடி பாரம்பரிய நூதன சாலை ஆகியவற்றுக்குச் சென்று ஆய்வுகளை மேற்கொண்டனர். (க-159)


## மரண அறிவித்தல்



### சின்னப்பு நாகலிங்கம்

தோற்றம் 10.11.1944 — மறைவு 07.05.2026

அச்சுவேலி, தம்பாலையைப் பிறப்பிடமாகவும், ஆஸ்பத்திரி வீதி, சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு நாகலிங்கம் அவர்கள் கடந்த (07.05.2026) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.05.2026) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் ஆஸ்பத்திரி வீதி, சங்கானையில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முற்பகல் 11.00 மணியளவில் விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்
077 555 1573, 077 555 5558

ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை.
(CS/61391) J-1



## மரண அறிவித்தல்

பிறப்பு 14 . 01 . 1952



இறப்பு 05 . 05 . 2026

### பொன்னையா திருபுரச்சந்திரன் (குகானந்தன்)

Quantity Surveyor (Oman, Dubai, Abudabi)
உரிமையாளர்:- Bhaavi Guest Inns

புறூடி ஒழுங்கை அரியாலையைப் பிறப்பிடமாகவும் கச்சேரி ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா திருபுரச்சந்திரன் காலமானர்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - யோகம்மா தம்பதியரின் புத்திரனும். காலஞ்சென்றவர்களான "குட்டித்தம்பி மாஸ்ரர்" என்று அன்பாக அழைக்கப்பட்ட மயில்வாகனம் ரோகினியம்மா தம்பதியரின் மருமகனும். வசந்தி என்று அழைக்கப்படும் கலாதேவியின் அன்புக் கணவரும். பிரதீப். மயூரா. ஜோதீசன். சாம்பவி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும். சாராவின் அன்பு மாமனாரும். யஹ்யாவின் ஆருயிர்ப்பேரனும். காலஞ்சென்றவர்களான சிவயோகேஸ்வரன். உமாமகேஸ்வரி. வரலட்சுமி. யோகானந்தன். திருலோசனி. கிருபாகரன் மற்றும் கணேசானந்தன். பத்மலோசனி ஆகியோரின் சகோதரனும். காலஞ்சென்றவர்களான யோகாதேவி. வைற்றஸ். இராசலெட்சுமி. குமாரத்தியானன் மற்றும் ஸ்ரீயமுனாதேவி. வசந்தகுமாரி. காலஞ்சென்றவர்களான தேவராசா. கணேசராசா. வாமதேவா. மற்றும் கமலாதேவி. இரத்தினேஸ்வரன். மேகலாதேவி. ஸ்ரீதேவா. மகெஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 10.05.2026 ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று. பிற்பகல் 3.00 மணியளவில் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்:
குடும்பத்தினர்
076 473 3190

6, கச்சேரி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
(cs 61396) N-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோத்தாபயவுக்கு...

கட்டளை அனுப்புமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
2022ஆம் ஆண்டு அரகலய போராட்டம் வன்முறையாக மாறிய தில் முன்னாள் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சொத்துக்கள் சேதப்படுத்தப்பட்டன. இதையடுத்து, சொத்திழப்பு ஏற்பட்ட வர்களுக்கு அப்போதைய அரசாங் கத்தால் இழப்பீடுகள் வழங்கப்பட்டன. சிலர் போலித் தகவல்களை வழங்கி மோசடியான முறையில் இழப்பீட் டைப் பெற்றனர் என்பது விசாரணை களில் கண்டறியப்பட்டது. அத்தகை யவர்களிடம் இருந்து குறித்த நிதியை மீளப்பெறுமாறு அடிப்படை மனித உரிமைமீறல் மனு தாக்கல் செய்யப் பட்டுள்ளது. அந்த மனுமீதான விசா ரணை உயர்நீதிமன்றத்தில் நேற்று இடம்பெற்றது. இதன்போதே, இந்த விவகாரத்தில் அப்போதைய ஜனாதி பதி கோத்தாபயவுக்கு அழைப்புக் கட்டளை அனுப்புமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
இந்த வழக்கில் கோத்தாபயவுக்கு அழைப்புக் கட்டளை அனுப்புமாறு முன்னரும் உத்தரவிடப்பட்டது. எனி னும், அழைப்புக்கட்டளை முறையா கப் பூர்த்திசெய்யப்படவில்லை. இதை யடுத்தே, மீளவும் அழைப்புக் கட்ட ளையை அனுப்புமாறு மன்று அறிவு றுத்தியமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## வலி.வடக்கு...

அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தது வது:-
வலிகாமம் வடக்கு மயிலிட்டி மற்றும் பலாலி பகுதிகளில் ஆயிரக் கணக் கான குடும்பங்களின் காணிகள் படையினரின் பிடியில் உள்ளன. அந்தக் காணிகளை விடுவிக்குமாறு நாங்கள் நீண்டகாலமாக வலியுறுத்தி வருகின்றோம். எனினும் எமது கோரிக்கை செவிசாய்க்கப்படவில்லை. ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங்கம் காணிகளை விடுவிப்பது தொடர்பில் வாக்குறுதி வழங்கியுள்ள போதிலும் தற்போதுவரை அந்த வாக் குறுதிகள் எவையும் நிறைவேற்றப்பட வில்லை. எமது காணிகளில் எம்மை வாழத்தான் விடவில்லை. நிம்மதியாக சாகவாவது அனுமதிக்க வேண்டும் - என்றனர். (அ-ம-26)

## ஐந்து...

போக்குவரத்துத் தேவைக்காக வாக னங்கள் இல்லாத நிலையில், வாக னங்களை வாடகைக்கு அமர்த்தியே போக்குவரத்தை மேற்கொள்ள வேண்டிய நிலை தற்போதுள்ளது. இதற்காக மாதாந்தம் 3 லட்சத்து 40 ஆயிரம் ரூபா வாடகையில் வாகனம் ஒன்று பெறப்பட்டுள்ளது. இவ்வா றான நிலையிலேயே, தவிசாளரின் வாகனத்துக்காக கடந்த 5 மாதங்க ளில் 17 லட்சம் ரூபா செலவிடப்பட்டுள் ளது.
ஒவ்வொரு மாதமும் மூவாயிரம் கிலோமீற்றர் என்ற வரையறையைக் கொண்டதாகவே இந்த வாடகை ஒப் பந்தம் அமைந்துள்ளது. நிர்ணயிக் கப்பட்ட தூரத்தைத் தாண்டும் ஒவ் வொரு கிலோமீற்றருக்கும் 150 ரூபா மேலதிகமாக அறவிடப்படும் என்ப தும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-110)

## கபில...

பெறுமதியான 10 விமானங்களை கொள்வனவு செய்யும் ஒப்பந்தத்தின் போது, 16 மில்லியன் அமெரிக்க டொலரை லஞ்சமாகப் பெற்றார் என்ற குற்றச்சாட்டு கபில சந்திரசேனவுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ளது.
இந்தக் குற்றச்சாட்டுக்களுக்காக அவர் கைதுசெய்யப்பட்டு விளக்க மறியலில் வைத்து விசாரிக்கப்பட்டு வந்த நிலையில், கடந்த இரு தினங்க ளுக்கு முன்னர் பிணையில் விடுவிக் கப்பட்டிருந்தார். எனினும், நீதிமன்றத் தின் பிணை நிபந்தனைகளை அவர் மீறியுள்ளார் என்றும், பிணையாளர் களுக்கு தலா 15 ஆயிரம் ரூபா பணம் வழங்கப்பட்டுள்ளது என்றும் லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு நீதிமன்றத்துக்குத் தெரிவித்தது. எனவே, வழக்கு முடியும்வரை அவரை விளக்கமறியலில் வைப்ப தற்கு உத்தரவிடுமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டது.
லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுவின் கோரிக்கையை ஏற்ற நீதி மன்றம் அவருக்கு வழங்கப்பட்ட பிணையை ரத்துச்செய்து பிடியாணை பிறப்பித்திருந்தது. இதையடுத்தே, கொள்ளுப்பிடியில் உள்ள வீடொன் றில் கபில சந்திரசேன நேற்றுச் சடல மாக மீட்கப்பட்டுள்ளார். உடற்கூற்றுப் பரிசோதனைகளை மேற்கொள்வ தற்கு தற்போது நடவடிக்கைகள் இடம் பெற்று வருகின்றன. (அ-ம)

## கபிலவின்...

விமானக் கொள்வனவு தொடர்பான வழக்கில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச உள்ளிட்ட பல் வேறு தரப்பினருக்கு எதிராக விசார ணைகள் இடம்பெற்று வருகின்றன. இவ்வாறான பின்னணியிலேயே பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த கபில சந்திரசேன சடலமாக மீட்கப்பட் டுள்ளார். இதையடுத்தே, இந்த மர ணத்தில் தமக்கு வலுவான சந்தேகங் கள் உள்ளன என்று பொலிஸார் கூறியுள்ளனர். (அ-ம)

## யாழ்தேவி...

மற்றும் வெள்ளி ஆகிய மூன்று தினங் களில் இந்தக் கூடுதல் சேவைகள் வழங்கப்படவுள்ளன. எதிர்வரும் திங் கட்கிழமையில் இருந்து இந்தச் சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. குறித்த தினங்களில் கொழும்பிலி ருந்து காலை 6.40 மணிக்கு புறப் பட்டு வவுனியாவை 11.36 மணிக்கு கிளிநொச்சி நகரத்தை 12.51 மணிக் கும் யாழ்ப்பாணத்தை 1.59 மணிக் கும் வந்தடையும் ரயில் இறுதியாக 2.33 மணிக்கு காங்கேசத்துறையை சென்றடையும் என அறிவிக்கப்பட் டுள்ளது. இதற்கான கட்டணம் சாதா ரண கட்டணமாகவே அறிவிக்கப்படவுள் ளது. (அ-ம)

## யாழ்...

குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. யாழ்ப் பாணம் மத்திய பேருந்துத் தரப்பிடத் தில் மலசலகூடம் அமைக்கப்பட்டுவ ரும் நிலையில், அந்தக் கட்டுமா னத்துக்கு தண்ணீர் விநியோகம் தொடர்பான நடவடிக்கைகள் நேற்று இடம்பெற்றன. இதன்போது இ.போ.ச. நிர்வாகத்தினர் அந்தப் பணிகளுக் குத் தடை விதித்துடன், தமது நீண்ட காலப் பாவனையில் உள்ள ஆதனத் தில் தம்மைப் புறக்கணித்து இந்த நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன என்று அவர்கள் குற்றம் சுமத்தினார்கள். இதற்கு யாழ்ப்பா ணம் மாநகரசபை மறுப்புத் தெரிவித் ததுடன், தமக்குச் சொந்தமான ஆத னத்தில் கட்டுமானப் பணிகள் இடம் பெறுவதற்கு இ.போ.ச. தரப்பு தடைவி திக்க முடியாது என்று அவர்கள் குறிப்பிட் டனர்.
இந்த விடயம் தொடர்பில் யாழ்ப்பா ணம் பொலிஸ் நிலையத்தில் யாழ்ப் பாணம் மாநகர ஆணையாளராலும், தொழில்நுட்ப உத்தியோகத்தராலும் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது. இரு தரப்பினரும் இணக்கப்பாட்டுக்கு வராதநிலையில் இந்த விடயத்தை நீதிமன்றத்துக்கு அனுப்புவதற்கு பொலிஸார் தீர்மானித்துள்ளனர். எதிர்வரும் திங்கட்கிழமை இந்த வழங்கு யாழ்ப்பாணம் நீதவான் நீதி மன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்ப டவுள்ளது. யாழ்ப்பாணம் மாநகர சபை சார்பில் சட்டத்தரணி சுமந்திரன் முன்னிலையாகவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## இரு...

மூன்றாம்கட்ட அகழ்வுப் பணிகளின் 11ஆம் நடவடிக்கைகள் நேற்று இடம் பெற்றன. இதன்போது, புதைகுழிக் குள் இருந்து மேலும் இரண்டு என்புத் தொகுதிகள் மீட்கப்பட்டுள்ளன. அத் துடன் மேலும் ஒரு என்புத்தொகுதி புதிதாக அடையாளம் காணப்பட்டுள் ளது.
யாழ்ப்பாணத்தில் நேற்று நிலவிய மழையுடனான காலநிலை காரண மாக புதைகுழி அகழ்வுப் பணிகளில் பாதிப்பு ஏற்பட்டது. புதைகுழிக்குள் மழைநீர் தேங்கிய நிலையில் நல்லூர் பிரதேசசபையின் பவுசர்கள் மூலம் தண்ணீர் அகற்றப்பட்டு அதன் பின் னர் அகழ்வுப் பணிகள் தொடர்ச்சி யாக முன்னெடுக்கப்பட்டன.
இன்றையதினமும் அகழ்வுப் பணிக ளைத் தொடர்ச்சியாக முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இன்றும் மழை தொடரும் பட்சத்தில் அகழ்வுப் பணிகள் ஜூன் மாதம் முதலாம் திகதி வரை ஒத்திவைக்கப்பட வாய்ப்பு உள் ளதாகத் தெரியவருகின்றது.
செம்மணிப் புதைகுழியில் இருந்து இதுவரை 260 என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலை யில், அவற்றில் 256 என்புத் தொகு திகள் மீட்கப்பட்டுள்ளன.
பேராசிரியர் ராஜ் சோமதேவ தலை மையிலான குழுவினர் அகழ்வுப் பணிகளை மேற்கொண்டு வருகின்ற னர். நீதவான் எஸ்.லெனின்குமார் அகழ்வுப் பணிகளைக் கண்கா ணித்து வருகின்றார். காணாமல் ஆக் கப்பட்டோர் அலுவலகத்தின் சார்பில் சட்டத்தரணி பூரணி மரியநாயகம், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பில் சட்டத்தரணி நிறஞ்சன், சட்ட மருத்துவ அதிகாரி செல்லையா பிரணவன் தலைமையி லான குழுவினர் ஆகியோர் அகழ்வுப் பணிகளின்போது முன்னிலையாகி வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## வீதியை...

தையிட்டி திஸ்ஸ விகாரைக்காக ஆக் கிரமிக்கப்பட்ட காணிகளில் அண்மை யில் அளவீட்டுப் பணி இடம்பெறவி ருந்தது. காணிகளின் உரிமையாளர் கள் அந்த முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்காத போதிலும், விகாரைக்காக ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பவானி வீதியை தவிசாளர் சுகிர்தன் அடையா ளம் காட்டியிருந்தார். இதையடுத்து, அந்த வீதியை இடைமறித்து அமைக் கப்பட்டுள்ள எல்லையை நாளைமறு தினத்துக்குள் அகற்றுமாறும், இல் லையேல் பிரதேசசபை அந்த எல் லையை அகற்றும் என்றும் வலிகா மம் வடக்கு பிரதேசசபை தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தனால் தையிட்டி திஸ்ஸ விகாராதிபதி ஜிந்தோட்ட நந்த ராம தேரருக்கு கடிதம் அனுப்பப்பட் டது.
பிரதேசசபையின் இந்த நடவடிக் கைக்கு எதிராக, தையிட்டி விகாராதிபதி பொலிஸாரிடம் முறைப்பாடு வழங்கி யிருந்தார். அந்த முறைப்பாட்டுக்கு அமையவே தையிட்டி திஸ்ஸ விகா ரைக்காக ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பவானி வீதியை விடுவிப்பதற்கு பிர தேசசபை நடவடிக்கை எடுத்துவரும் நடவடிக்கைக்குத் தடைவிதிக்குமாறு பொலிஸார் நீதிமன்றத்தை நாடியுள் ளனர்.
எனினும், பொலிஸாரின் சமர்ப்ப ணத்தை மட்டும் அடிப்படையாக வைத்து தீர்ப்பு வழங்குவதற்கு நீதி மன்றம் திட்டவட்டமாக மறுத்துள்ளது. இந்த விடயத்தில் வலி.வடக்கு பிரதே சசபைத் தவிசாளர் சுகிர்தனையும், வலி.வடக்கு பிரதேசசபை செயலாள ரையும் நாளைமறுதினம் திங்கட் கிழமை முன்னிலையாகுமாறு நீதி மன்று அறிவுறுத்தல் வழங்கியுள் ளது. வலி.வடக்கு பிரதேசசபைத் தவிசாளர் சுகிர்தனின் சார்பில் சட்டத் தரணி சுமந்திரன் முன்னிலையாள வுள்ளார் என்றும் தெரியவருகின்றது. தையிட்டி திஸ்ஸ விகாரைக்காக ஆக் கிரமிக்கப்பட்டுள்ள காணிகளுக்குக் குறுக்காகவே பவானி வீதி அமைந் துள்ளது. எனவே, அந்த வீதியை விடுவித்தால் கணிசமான காணிகள் தானாக விடுவிக்கப்படும் நிலை உள் ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

noolaham.org | noolaham.media

### கிளிநொச்சி மாவட்டத்தில்

# நெருக்கடிகளால் கைவிடப்பட்டிருந்த வீதிச் சீரமைப்புப் பணிகள் ஆரம்பம்!



கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த கால நெருக்கடிகளால் இடைநிறுத்தப்பட்டிருந்த வீதிப் புனரமைப்புப் பணிகள் முதற்கட்டமாக பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலர் பிரிவு மற்றும் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவு ஆகியவற்றில் ஆரம்பிக்கப் படவுள்ளன.

இந்த வீதி அபிவிருத்திப் பணிகளை விரைவுபடுத்துவது குறித்த கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்டச் செயலர் எஸ். முரளிதரன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

அதில் பொருளாதார நெருக்கடி மற்றும் கொவிட் பெருந்தொற்றுக் காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் தடைப்பட்டிருந்த வீதி அபிவிருத்திப் பணிகளுக்கு நிதி ஒதுக்கீடுகள் கிடைத்துள்ள நிலையில் அதனை விரைவுபடுத்துவது தொடர்பாக அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது. அத்துடன் திட்டமிடல் பணிகளில் உள்ளூர் மக்களின் பங்களிப்பை உறுதிப் படுத்துவதன் மூலம், வீதிகளை நீண்டகாலம் நிலைத்திருக்கச் செய்யமுடியும் என்றும் வலியுறுத்தப்பட்டது. கலந்துரையாடலில் மாவட்டச் செயலர், ஐரோட் திட்டத்தின் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர், மாவட்டச் செயலகத் திட்டமிடல் பணிப்பாளர், கிராம அலுவலர்கள் மற்றும் கிராமிய அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-55)

# டெல்லியைத் தோற்கடித்து கொல்கத்தா முன்னேற்றம்!

**ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் டெல்லியை வீழ்த்தி புள்ளிப்பட்டியலில் ஏற்றம் கண்டது கொல்கத்தா நைட் ரைடர்ஸ்.**



நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற கொல்கத்தா அணி முதலில் களத்தடுப்பைத்தீர்மானித்தது. இதன்படி முதலில்துடுப்பெடுத்தாடிய டெல்லி அணி 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 142 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக பதும் நிஷங்க 50 ஓட்டங்களையும், அசுதோஸ் சர்மா 39 ஓட்டங்களையும், கே.எல். ராகுல் 23 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் அனுகுல் றோய், கார்த்திக் தியாகி இருவரும் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்கள்.

பதிலுக்குக் களமிறங்கிய கொல்கத்தா அணி 14.2 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை இழந்து இலக்கை அடைந்து வெற்றி பெற்றது. அதிகபட்சமாக பின் ஆலன் ஆட்டமிழக்காமல் 100 ஓட்டங்களைக் குவித்தார். இந்த வெற்றியைத் தொடர்ந்து புள்ளிப்பட்டியில் 7ஆவது இடத்துக்கு கொல்கத்தா முன்னேறியது. (ம)


## முதியோர் பராமரிப்பு ஆட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு முதியோர் பராமரிப்பிற்கு ஆட்கள் தேவை.

சம்பளம் : நேரில் தீர்மானிக்கபடும்.

தங்கியிருந்து பணி புரியும் ஊழியர்கள் தேவை. (பெண்கள்)

**தொடர்புகளுக்கு:**

**077 500 5412**

(CS 31779) A




# காணி நிர்வாகச் சிக்கல்கள் அதிகாரிகளுக்குப் பயிற்சி

மன்னார், மே 9

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணி தொடர்பான சட்டச்சிக்கல்கள் அதிகரித்துவரும் நிலையில், மக்களுக்குத் துரிதமாகவும் சட்டரீதியாகவும் சேவைகளை வழங்குவதை உறுதிப்படுத்தும் நோக்கில் அரச அதிகாரிகளுக்கான விசேட தெளிவூட்டும் செயலமர்வு மன்னார் பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் முன்னெடுக்கப் பட்டது.

கிழக்கு மாகாணத்தின் முன்னாள் உதவிக் காணி ஆணையாளர் கதிர் காமத்தம்பி குருநாதன் வளவாளராகக் கலந்துகொண்டார். மன்னார் நகர பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த கிராம அலுவலர்கள், காணி உத்தியோகத்தர்கள் மற்றும் குத்தகை அடிப்படையிலான காணி வழங்கல் பணிகளில் ஈடுபடும் அதிகாரிகள் பங்கேற்றனர். காணி அற்றவர்களுக்குக் காணி வழங்கும் போது பின்பற்றவேண்டிய சட்ட நடைமுறைகள் குறித்து அதிகாரிகள் எழுப்பிய சந்தேகங்களுக்கு விளக்கமளிக்கப் பட்டது. (ச-56)


## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் கைதடி சந்திக்கு அருகாமையில் 04 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- A9 றோட்டில் இருந்து 100m தூரம்
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்டுள்ளது
- நன்னீர் ஊற்று, நல்ல சூழல்
- சகல ஆவணங்களுடன் நீண்ட கால தோம்புடன் நிலப்பரப்பு.
- பார்வையிடும் நேரம் : காலை 8.30 தொடக்கம் மாலை 6.30 மணிவரை

**தொடர்பு:- 077 6234 204**

(CS 31708)A



## மரண அறிவித்தல்

அன்னை மடியில்
24 . 04 . 1939



ஆண்டவன் அடியில்
03 . 05 . 2026

### மார்க்கண்டு சபித்தாதேவி

சித்திரமேழி இளவாலையைப் பிறப்பிடமாகவும், சுழிபுரம் கிழக்கு, வைரவர் புளியங்குளம் வவுனியா, நல்லூர் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பிள்ளை என அழைக்கப்படும் மார்க்கண்டு சபித்தாதேவி அவர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை 03.05.2026 இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மாதவர் மார்க்கண்டு (Prision Jailor மற்றும் கலாபூசணம்) அவர்களின் அன்பு மனைவியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (10.05.2026) ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 10.30 மணிக்கு செம்மணி இந்து மயானத்திற்கு பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**435/55, கோயில் வீதி,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 885 1409**
**077 883 9625**

(CS61392) N-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.05.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.